செ.வெ.எண்: 824 நாள்: 15.12.2020

**தஞ்சாவூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ஒப்பந்தப் பயிற்றுநர் பணியிடத்திற்கு விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப.,அவர்கள் தகவல்**

**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் இயங்கும் தஞ்சாவூர் அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் COPA தொழிற்பிரிவில் காலியாகவுள்ள ஒப்பந்தப் பயிற்றுநர் பணியிடத்திற்கு மாதம் ரூ.10,000/- தொகுப்பூதியத்தில் கீழ்க்கண்ட தகுதிகளின் அடிப்படையில் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

**வயது:**

**01.07.2020 அன்று குறைந்தபட்சம் 18 வயது இருக்க வேண்டும். அதிகபட்சம் அரசு விதிகளின்படி இனம்வாரியாக வயது வரம்பில் தளர்வு உண்டு.**

**இனசுழற்சி: பொது சுழற்சி (GENERAL TURN NON PRIORITY)**

**கல்வித்தகுதி:**

**அங்கீகரிக்கப்பட்ட பொறியியல் கல்லூரி , பல்கலைக்கழகத்திலிருந்து கணினி அறிவியல் / தகவல் தொழில்நுட்பம் இன்ஜினியரிங் பிரிவில் பட்டம் மற்றும் ஓராண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.**

**அல்லது**

**கணினி அறிவியல் / கணினி அப்ளிகேசன் / தகவல் தொழில்நுட்பத்தில் முதுநிலை அல்லது NIELIT B Level மற்றும் ஓராண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.**

**அல்லது**

**கணினி அறிவியல் / கணினி அப்ளிகேசன் / தகவல் தொழில்நுட்பப் பாடப் பிரிவில் இளங்கலை பட்டம் அல்லது அங்கீகாரம் பெற்ற பல்கலைக்கழகத்தில் PGDCA பட்டம் அல்லது NIELIT A Level மற்றும் இரண்டாண்டு அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.**

**அல்லது**

**இரண்டு ஆண்டு அனுபவத்துடன் அங்கீகரிக்கப்பட்ட கழகம் / நிறுவனத்தில் இருந்து கணினி அறிவியல் / தகவல் தொழில்நுட்பத்தில் மூன்று ஆண்டு டிப்ளோமா முடித்திருக்க வேண்டும்.**

**அல்லது**

**COPA பிரிவில் தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழ் அல்லது தேசிய தொழிற்சான்றிதழ் மற்றும் தேசிய கைவினைஞர் பயிற்றுநர் பயிற்சி குறித்த சான்றிதழ் மூன்றாண்டு முன் அனுபவத்துடன் இருக்க வேண்டும்..**

**விண்ணப்பங்களை துணை இயக்குநர்/முதல்வர்,அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், தஞ்சாவூர்-613007. என்ற முகவரிக்கு 28.12.2020 மாலை 5.45 மணிக்குள் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்ப வேண்டும். குறிப்பிட்ட தேதிக்கு பின்னர் பெறப்படும் விண்ணப்பங்களும் சரிவர பூர்த்தி செய்யப்படாத மற்றும் உரிய சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்களும் ஏற்கப்படமாட்டாது** என மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.ம.கோவிந்த ராவ் இ.ஆ.ப.,அவர்கள் தெரிவித்துள்ளார்.

,

---

செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் தஞ்சாவூர்.